# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV பணிகள்)

**தேர்வு:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

**பாடம் :** தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**பகுதி**: அலகு I: இலக்கணம்- ஒருமை பன்மை

### உள்ளடக்கம்

**ஒருமை பன்மை** ........ 2

**மாதிரி வினாக்கள் (புத்தகப் பயிற்சி வினாக்கள்)** ........ 19

**முந்தைய ஆண்டு வினாக்கள்** ........ 21

**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

## ஒருமை பன்மை

ஒருமை என்பது ஒரேயொரு பொருளைக் குறிக்கும். பன்மை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருட்களைக் குறிக்கும். தமிழில் இலக்கண விதிகளின்படி இந்தச் சொற்கள் மாற்றம் பெறுகின்றன.

எ. கா – புலி, மாணவன் (ஒருமை)

ஒருமைப் பொருள்களைக் குறிக்கும் பிரிவுகளில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்று அடங்கும்.

முருகன், வளவன், அவன் ஆகியவை ஆண்பால் ஒருமைச் சொற்கள்.

வள்ளி, குழலி, அவள் ஆகியவை பெண்பால் ஒருமைச் சொற்கள்.

மாடு, கல், அது ஆகியவை ஒன்றன்பால் ஒருமைச் சொற்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை அல்லது நபர்களைக் குறிப்பது பன்மை.

எ. கா – புலிகள், மாணவர்கள்

பலர்பால், பலவின்பால் ஆகியவை பன்மை பிரிவுகளில் அடங்கும். இதில் பலர்பால் என்பது உயர்திணை, பலவின்பால் என்பது அஃறிணை.

**தான், தாம் என்னும் சொற்கள்**

தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

**(எ.கா.)**

- தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
- மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.

*(இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)*

**(எ.கா.)**

- மாடுகள் தமது தலையை ஆட்டின.
- கன்று தனது தலையை ஆட்டியது.

பெயர் ஒருமையில் இருந்தால், வினைமுடிப்பும் ஒருமையிலேயே இருத்தல் வேண்டும்.

**(எ.கா.)** திருடன் பிடிபட்டான்.

பெயர் பன்மையில் இருந்தால், வினைமுடிப்பும் பன்மையிலேயே இருத்தல் வேண்டும்.

**(எ.கா.)** திருடர் பிடிபட்டனர்.

**ஒருமை - பன்மை பிழை திருத்தம்**

**பிழை** அ) காற்று வீசின; மரங்கள் அசைந்தது.

ஆ) தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றான்.

**திருத்தம்** அ) காற்று வீசியது; மரங்கள் அசைந்தன.

ஆ) தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றனர்.

- எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.
- எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

**எ.கா.** என் புத்தகம் இதுவன்று

என் புத்தகங்கள் இவையல்ல.

- எழுவாய் - **கள்** விகுதி பெற்றால் பயனிலையும் **கள்** விகுதி பெறுதல் வேண்டும்.
- எழுவாய் - **அர்** விகுதி பெற்றால் பயனிலையும் **அர்** விகுதி பெறுதல் வேண்டும்.

**எ.கா.** மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்.

மூவர் தேவாரத்தைப் பாடினர்.

**அன்று - அல்ல**

**அன்று** என்பது ஒருமைக்கும் **அல்ல** என்பது பன்மைக்கும் உரியன.

**(எ.கா.)** இது பழம் அன்று.

இவை பழங்கள் அல்ல.

**தன்மைப் பெயர்கள்**

நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்.

நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.

1. **யான்** என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **என்** எனத் திரியும்.

| வேற்றுமை உருபு | திரிந்த வடிவம் |
|---|---|
| **ஐ** | என்னை |
| **ஆல்** | என்னால் |
| **கு** | எனக்கு |
| **இன்** | என்னினின் |
| **அது** | எனது |
| **கண்** | என்கண் |

2. **யாம்** என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **எம்** எனத் திரியும்.

எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எம்கண் என வரும்.

3. **நாம்** என்னும் தன்மைப் பன்மைப் பெயர் **நம்** எனக் குறுகும்.

நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நம்கண் எனக் குறுகி வரும்.

**4. யாங்கள், நாங்கள்** என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது **எங்கள்** எனத் திரியும். எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது எனத் திரிந்து வரும்.

**முன்னிலைப் பெயர்கள்**

நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயர். நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

**1. நீ** என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **நின்** எனவும், **உன்** எனவும் மாறும்.

| வேற்றுமை உருபு | திரிந்த வடிவம் |
|---|---|
| **ஐ** | நின்னை, உன்னை |
| **ஆல்** | நின்னால், உன்னால் |
| **கு** | நினக்கு, உனக்கு |
| **இன்** | நின்னினின், உன்னினின் |
| **அது** | நினது, உனது |
| **கண்** | நின்கண், உன்கண் |

**2. நீர்** என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **நும், உம்** எனத் திரியும்.

நும்மை, நும்மால், நுமக்கு, நும்மின், நுமது, நும்கண்;

உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்கண்.

**3. நீங்கள்** என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **நுங்கள், உங்கள்** என மாறுபடும்.

நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது;

உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.

**படர்க்கைப் பெயர்கள்**

தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது கீழ்க்காணுமாறு திரியும்.

**1. தான்** என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **தன்** என மாறும்.

| வேற்றுமை உருபு | திரிந்த வடிவம் |
|---|---|
| **ஐ** | தன்னை |
| **ஆல்** | தன்னால் |
| **கு** | தனக்கு |
| **இன்** | தன்னினின் |
| **அது** | தனது |
| **கண்** | தன்கண் |

**2. தாம்** என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் **தம்** எனத் திரிந்து வேற்றுமை உருபேற்கும்.

தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தம்கண்.

**3. தாங்கள்** என்னும் படர்க்கைப் பெயர் **தங்கள்** எனத் திரியும்.

தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண்.

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்

நீ நீர் என்னெம் நின்னும் ஆம்பிற

குவ்வின் அவ்வரும், நான்கு ஆறு இரட்டல் – **நன்னூல், 247**

**எதிர்மறைச்சொற்கள்**

வந்தது நீ அல்ல; பார்த்தது நான் அல்ல, நான் படித்த புத்தகம் இது அல்ல என்றெல்லாம் பேசுகிறோம். இவையெல்லாம் சரியான தொடர்கள் அல்ல. எதிர்மறை வினைமுற்றுகள் பல உண்டு. அவற்றை இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

**தன்மை**

ஒருமை – நான் அல்லேன்.

பன்மை – நாம் அல்லோம்.

**முன்னிலை**

ஒருமை – நீ அல்லை.

பன்மை – நீவிர் அல்லீர்.

**படர்க்கை**

ஆண்பால் – அவன் அல்லன்.

பெண்பால் – அவள் அல்லள்.

**4. தாங்கள்** என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது **தங்கள்** எனத் திரியும்.

தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண் எனத் திரிந்து வரும்.

**தான், தாம் என்னும் சொற்கள்**

- தான் என்பது ஒருமையைக் குறிக்கும்.
- தாம் என்பது பன்மையைக் குறிக்கும்.
- தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- எ.கா. தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார். - மரியாதை நிமித்தமாக வந்தால் தமது.
- மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.

(இங்கு தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)

- எ.கா. மாடுகள் தமது தலையை ஆட்டின.
  கன்று தனது தலையை ஆட்டியது.

**வினைமுற்றுகள்**

**1. தன்மை வினைமுற்றுகள்**

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| **கடந்த காலம்** | வந்தேன், வந்தனென் | வந்தோம், வந்தனெம், வந்தனம் |
| **நிகழ்காலம்** | வருகின்றேன், வாராநின்றேன் | வருகின்றோம், வாராநின்றோம் |
| **எதிர்காலம்** | வருவேன் | வருவோம் |

**2. முன்னிலை வினைமுற்றுகள்**

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| **கடந்த காலம்** | வந்தாய், வந்தனை | வந்தீர்கள், வந்திர், வந்தனை |
| **நிகழ்காலம்** | வருகின்றாய், வாராநின்றாய் | வருகின்றீர்கள், வாராநின்றீர்கள் |
| **எதிர்காலம்** | வருவாய் | வருவீர்கள், வருதிர் |

**3. படர்க்கை வினைமுற்றுகள்**

| | ஆண்பால் ஒருமை | பெண்பால் ஒருமை | பலர்பால் பன்மை | ஒன்றன் பால் ஒருமை | பலவின் பால் பன்மை |
|---|---|---|---|---|---|
| **கடந்த காலம்** | வந்தான், வந்தனன் | வந்தாள், வந்தனள் | வந்தார்கள், வந்தனர் | வந்தது | வந்தன |
| **நிகழ்காலம்** | வருகின்றான் | வருகின்றாள் | வருகின்றார்கள் | வருகின்றது | வருகின்றன |

| **எதிர்காலம்** | வருவான் | வருவாள் | வருவார்கள் | வரும் | வாரா |
|---|---|---|---|---|---|

**12-ம் தமிழ் புத்தகம்**

ஒரு மொழியின் எழுத்துகளிலோ சொல்லமைப்பிலோ தொடரமைப்பிலோ சொற்பொருள் அமைப்பிலோ காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். தற்காலத் தமிழிலும் இவ்வகையான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்மாற்றங்களை எல்லாம் தழுவிக்கொள்கிற வகையில் காலத்திற்கேற்ற இலக்கணம் நமக்குத் தேவை. மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை.

**திணை, பால், எண், இடம்**

திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படை அலகுகள்; இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன. தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றைக் உணர்த்துகின்றன. எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைகிறது. பெரும்பாலான தொடர்களில் எழுவாயை வைத்துக்கொண்டே வினைமுற்றின் திணை, பால், எண் ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.

**முருகன் நூலகம் சென்றான்.**

இத்தொடரில், முருகன் என்னும் எழுவாய் அதன் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்திவிடுகிறது. மேலும், இந்த எழுவாய் தனக்குரிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு பெறுகிறது.

இதன்மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறியலாம்.

**திணைப்பாகுபாடு**

உலக மொழிகள் அனைத்திலும் பெயர்ச்சொற்களே மிகுதி என்பர். பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என்று இருவகையாகப் பிரிப்பர். இவ்வாறு பாகுபடுத்தும் முறை எல்லா மொழிகளிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. தமிழில் பொருட்குறிப்பை

அடிப்படையாகக் கொண்டு இருதிணைப் பாகுபாடு அமைந்துள்ளதை இலக்கண நூல்களால் அறியலாம்.

"உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே"

**(தொல். சொல் 1)**

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை; அவரல்லாத பிற அஃறிணை என்று கூறுகிறது. இவ்வகைப் பாகுபாடு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இல்லை.

இன்றைய தமிழில் யார்? எது? போன்ற வினாச்சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.

**அங்கே நடப்பது யார்?**

**அங்கே நடப்பது எது?**

என்னும் தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார்? என்ற பயனிலை உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.

குழந்தை, கதிரவன் போன்றவை இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிபு இருதிணை பெற்றும் வருகின்றது.

**குழந்தை சிரித்தான் - குழந்தை சிரித்தது**

**கதிரவன் உதித்தான் - கதிரவன் உதித்தது**

பேச்சு வழக்கில், அஃறிணை முடிபைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

**பால் பாகுபாடு**

தமிழில் பால்பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். பயனிலை விகுதிகளான ஆன், ஆள், ஆர், அது, அன முதலியவை பால்பகுப்பைக் காட்டுகின்றன.

பழந்தமிழில் ஐம்பால்களுள் பலர்பால் சொல், பன்மையிலும் உயர்வு கருதிச் சிலவேளைகளில் ஒருமையிலும் வந்துள்ளன.

**மாணவர் வந்தனர் (பன்மை) – ஆசிரியர் வந்தார் (ஒருமை)**

இக்காலத் தமிழில் உயர்பான்மை உணர்த்தும் சொல், பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்கு, 'கள்' என்னும் விகுதி உதவுகிறது.

**அவர் வந்தார். (ஒருமை)**

**அவர்கள் வந்தார்கள். (பன்மை)**

தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில் அமையும்போது வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.

**தங்கமணி பாடினான் - தங்கமணி பாடினாள்**

பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன.

**ஆண் - பெண்; அப்பா-அம்மா; தம்பி-தங்கை; தந்தை-தாய்**

அஃறிணை எழுவாயில் ஆண் பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எனவே ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால், பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.

**காளை உழுதது. பசு பால் தந்தது.**

ஆகிய தொடர்களில் காளையை ஆண்பாலாகவும் பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால், வினைமுற்று பால்பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.

தற்காலத்தில், அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்க பசுமாடு எனவும் ஆண்பாலைக் குறிக்க காளைமாடு (எருது) எனவும் சொற்கள் வழங்கப்படுகின்றன. பிற விலங்குகளைக் குறிக்கையில் ஆண்குரங்கு, பெண்குரங்கு எனவும் எழுவாய்ப் பொதுப்பெயருடன் ஆண், பெண் என்னும் பால்பாகுபாட்டுப் பெயர்கள் முன்சேர்த்து வழங்கப்படுகின்றன.

**எண் பாகுபாடு**

இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருகின்றன.

**இரண்டு மனிதர்கள்**

அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.

**பத்துத் தேங்காய்**

இவற்றைப்பத்துத் தேங்காய்கள் என்று எழுதுவதில்லை.

இக்காலத் தமிழில் அஃறிணைப் பன்மைக்கெனத் தனி வினைமுற்றுகள் இல்லை. ஆனால், ஒருமை, பன்மை வேறுபாடு எழுவாயிலேயே வெளிப்படுகிறது.

**ஒரு மரம் வீழ்ந்தது**

**பத்து மரம் வீழ்ந்தது**

தற்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படுகிற ஒருமை – பன்மை பற்றிய குழப்பங்களுள் ஒன்று 'ஒவ்வொரு' என்னும் சொல்லைப் பற்றியதாகும்.

*ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.*

போன்ற தொடர்களைப் பேசவும் எழுதவும் காண்கிறோம்.

**ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.**

**ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.**

என்றே பேசவும் எழுதவும் வேண்டும். (ஒவ்வொரு – ஒருமை)

## இடப்பாகுபாடு

இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிப் பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும். பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.

தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை, பன்மை பாகுபாடு உண்டே தவிர ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை. சான்றாக, **நான் புத்தகம் கொடுத்தேன்** என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய ஆணா? பெண்ணா? என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால் பாகுபாட்டை அறிய முடியாது.

தன்மைப்பு பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இருவகை உண்டு.

பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை** ஆகும்.

**நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை)**

இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது **உளப்படுத்தாத் தன்மைப் பன்மை** ஆகும்.

**நாங்கள் முயற்சி செய்வோம் (உளப்படுத்தாத் தன்மைப் பன்மை)**

நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலையில் பல்வேறு நோக்கில் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைத் தவிர்ப்பதற்கும் புதியனவற்றை ஏற்பதற்கும் நாம் தயங்கியதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.

**சில எடுத்துக்காட்டுகள்**

| ஒருமைத் தொடர் | பன்மைத் தொடர் |
|---|---|
| **பறவை பறந்தது.** | பறவைகள் பறந்தன. |
| **கல் விழுந்தது.** | கற்கள் விழுந்தன. |
| **மரம் வளர்ந்தது.** | மரங்கள் வளர்ந்தன. |
| **புத்தகம் மேசையில் உள்ளது.** | புத்தகங்கள் மேசையில் உள்ளன. |
| **அவன் மாணவன்.** | அவர்கள் மாணவர்கள். |
| **இது பழம் அன்று.** | இவை பழங்கள் அல்ல. |
| **மாடு மேய்ந்தது.** | மாடுகள் மேய்ந்தன. |
| **மலர் பூத்தது.** | மலர்கள் பூத்தன. |

| | |
|---|---|
| **குதிரை ஓடியது.** | குதிரைகள் ஓடின. |
| **நாய் குரைத்தது.** | நாய்கள் குரைத்தன. |
| **யானை பிளிறியது.** | யானைகள் பிளிறின. |
| **ஆறு ஓடியது.** | ஆறுகள் ஓடின. |
| **மலை உயர்ந்தது.** | மலைகள் உயர்ந்தன. |
| **தேனீ பறந்தது.** | தேனீக்கள் பறந்தன. |
| **பழம் இனித்தது.** | பழங்கள் இனித்தன. |
| **வீடு அழகானது.** | வீடுகள் அழகானவை. |
| **கண்ணாடி உடைந்தது.** | கண்ணாடிகள் உடைந்தன. |
| **விளக்கு எரிந்தது.** | விளக்குகள் எரிந்தன. |
| **சிறுவன் சிரித்தான்.** | சிறுவர்கள் சிரித்தனர். |
| **பெண் பாடினாள்.** | பெண்கள் பாடினர். |
| **தலைவர் பேசினார்.** | தலைவர்கள் பேசினர். |
| **மாணவன் எழுதினான்.** | மாணவர்கள் எழுதினர். |
| **குறைந்தது.** | குறைந்தன. |
| **நிறைந்தது.** | நிறைந்தன. |
| **அது மரம்.** | அவை மரங்கள். |

| | |
|---|---|
| **இது பை.** | இவை பைகள். |
| **எது உனது?** | எவை உன்னுடையவை? |
| **அஃது இலை.** | அவை இலைகள். |
| **இஃது ஊசி.** | இவை ஊசிகள். |
| **தான் செய்த வேலை.** | தாம் செய்த வேலைகள். |
| **ஒவ்வொரு ஊரும்.** | எல்லா ஊர்களும். |
| **ஒரு நாடு.** | பல நாடுகள். |
| **சீடன் வந்தான்.** | சீடர்கள் வந்தனர். |
| **கவிஞன் பாடினான்.** | கவிஞர்கள் பாடினர். |
| **அலை மோதியது.** | அலைகள் மோதின. |
| **மேகம் கறுத்தது.** | மேகங்கள் கறுத்தன. |
| **கன்று துள்ளியது.** | கன்றுகள் துள்ளின. |
| **மணி ஒலித்தது.** | மணிகள் ஒலித்தன. |
| **காற்று வீசியது.** | காற்றுகள் வீசின. (பொதுவழக்கு) |
| **வெற்றி கிடைத்தது.** | வெற்றிகள் கிடைத்தன. |
| **தோல்வி அடைந்தான்.** | தோல்விகள் அடைந்தனர். |
| **வாழை காய்ந்தது.** | வாழைகள் காய்ந்தன. |

| | |
|---|---|
| **முத்து மின்னியது.** | முத்துக்கள் மின்னின. |
| **கதிர் முற்றியது.** | கதிர்கள் முற்றின. |
| **வலை விழுந்தது.** | வலைகள் விழுந்தன. |
| **மீன் துள்ளியது.** | மீன்கள் துள்ளின. |
| **அறிவாளி சொன்னான்.** | அறிவாளிகள் சொன்னார்கள். |
| **வீரன் போரிட்டான்.** | வீரர்கள் போரிட்டனர். |
| **சிங்கம் கர்ச்சித்தது.** | சிங்கங்கள் கர்ச்சித்தன. |
| **பசு பால் தந்தது.** | பசுக்கள் பால் தந்தன. |
| **கிளி பேசியது.** | கிளிகள் பேசின. |
| **குயில் கூவியது.** | குயில்கள் கூவின. |
| **பாம்பு ஊர்ந்தது.** | பாம்புகள் ஊர்ந்தன. |
| **எறும்பு சென்றது.** | எறும்புகள் சென்றன. |
| **வண்டு சுற்றியது.** | வண்டுகள் சுற்றின. |
| **பூமி சுழன்றது.** | பூமிகள் சுழன்றன. (அறிவியல் ரீதியாக) |
| **வானம் வெளுத்தது.** | வானங்கள் வெளுத்தன. |
| **மழை பொழிந்தது.** | மழைகள் பொழிந்தன. |
| **பயிர் செழித்தது.** | பயிர்கள் செழித்தன. |

| | |
|---|---|
| **விதை முளைத்தது.** | விதைகள் முளைத்தன. |
| **வேர் இறங்கியது.** | வேர்கள் இறங்கின. |
| **கிளை படர்ந்தது.** | கிளைகள் படர்ந்தன. |
| **இலை உதிர்ந்தது.** | இலைகள் உதிர்ந்தன. |
| **காய் கனிந்தது.** | காய்கள் கனிந்தன. |
| **பழம் பழுத்தது.** | பழங்கள் பழுத்தன. |
| **கல்வி கண் திறந்தது.** | கல்விகள் கண் திறந்தன. |
| **நாடு முன்னேறியது.** | நாடுகள் முன்னேறின. |
| **ஊர் சிரித்தது.** | ஊர்கள் சிரித்தன. |
| **வீடு அழகானது.** | வீடுகள் அழகானவை. |
| **தெரு நீளமானது.** | தெருக்கள் நீளமானவை. |
| **சாலை விரிந்தது.** | சாலைகள் விரிந்தன. |
| **கதவு திறந்தது.** | கதவுகள் திறந்தன. |
| **சன்னல் மூடியது.** | சன்னல்கள் மூடின. |
| **விளக்கு ஒளி தந்தது.** | விளக்குகள் ஒளி தந்தன. |
| **பாத்திரம் உருண்டது.** | பாத்திரங்கள் உருண்டன. |
| **சட்டை கிழிந்தது.** | சட்டைகள் கிழிந்தன. |

| | |
|---|---|
| **துணி நனைந்தது.** | துணிகள் நனைந்தன. |
| **நூல் அற்றது.** | நூல்கள் அற்றன. |
| **ஊசி குத்தியது.** | ஊசிகள் குத்தின. |
| **பந்து உருண்டது.** | பந்துகள் உருண்டன. |
| **பொம்மை ஆடியது.** | பொம்மைகள் ஆடின. |
| **வண்டி ஒடியது.** | வண்டிகள் ஒடின. |
| **கப்பல் மிதந்தது.** | கப்பல்கள் மிதந்தன. |
| **தோணி சென்றது.** | தோணிகள் சென்றன. |
| **வலை விரிந்தது.** | வலைகள் விரிந்தன. |
| **தூண்டில் விழுந்தது.** | தூண்டில்கள் விழுந்தன. |
| **சிற்பம் அமைந்தது.** | சிற்பங்கள் அமைந்தன. |
| **ஓவியம் வரைந்தான்.** | ஓவியங்கள் வரைந்தனர். |
| **பாடல் பாடினாள்.** | பாடல்கள் பாடினர். |
| **நடனம் ஆடினான்.** | நடனங்கள் ஆடினர். |
| **செய்தி வந்தது.** | செய்திகள் வந்தன. |
| **கடிதம் கிடைத்தது.** | கடிதங்கள் கிடைத்தன. |
| **உண்மை தெரிந்தது.** | உண்மைகள் தெரிந்தன. |

| | |
|---|---|
| **பொய் மறைந்தது.** | பொய்கள் மறைந்தன. |
| **நன்மை விளைந்தது.** | நன்மைகள் விளைந்தன. |
| **தீமை ஒழிந்தது.** | தீமைகள் ஒழிந்தன. |
| **பணம் சேர்ந்தது.** | பணங்கள் சேர்ந்தன. |
| **சொத்து கிடைத்தது.** | சொத்துக்கள் கிடைத்தன. |
| **வாழ்வு சிறந்தது.** | வாழ்வுகள் சிறந்தன. |
| **சாவு வந்தது.** | சாவுகள் வந்தன. (இலக்கணப்படி) |

### மாதிரி வினாக்கள் (புத்தகப் பயிற்சி வினாக்கள்)

**சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை **அல்ல**.
2. உங்களோடு வருவோர் நாம் **அல்லோம்**.
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் **அல்லள்**.
4. ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன **அல்ல**.
5. இந்த நிலத்துக்கு உரிமையாளர் நீ **அல்லை**.

**ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக.**

1. யானையின் கண் சிறியது.
   **விடை: யானையின் கண்கள் சிறியன**
2. காட்டு மரம் உயர்வானது
   **விடை: காட்டு மரங்கள் உயர்வானவை**
3. மயில் அழகானது
   **விடை: மயில்கள் அழகானவை**
4. பழம் பழுத்தது
   **விடை: பழங்கள் பழுத்தன**
5. நான் படித்தேன்
   **விடை: நாங்கள் படித்தோம்**

**பன்மையை ஒருமையாக மாற்றுக**

1. பசுவும் கன்றும் மேய்ந்தன
   **விடை: பசுவுடன் கன்று மேய்ந்தது.**
2. மரத்தில் காயும் கனியும் இருந்தன.
   **விடை: மரத்தில் காயுடன் கனி இருந்தது.**
3. சிறுவனும் சிறுமியும் வந்தனர்.
   **விடை: சிறுவனுடன் சிறுமி வந்தாள்.**
4. அண்ணனும் தம்பியும் பரிசு பெற்றனர்.
   **விடை: அண்ணனுடன் தம்பி பரிசு பெற்றான்.**
5. பாலும் தேனும் இனித்தன.
   **விடை: பாலுடன் தேன் இனித்தது.**
6. யானைப்படையும் குதிரைப்படையும் சென்றன

**விடை: யானைப்படையுடன் குதிரைப்படை சென்றது.**

**கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. சிறுமி **தனது** (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.
2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் **தமது** (தனது/தமது) உழைப்பை நல்கினார்.
3. உயர்ந்தோர் **தம்மைத்தாமே** (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்.
4. இவை **தாம்** (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.
5. குழந்தைகள் **தம்மால்** (தன்னால்/தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**இரண்டாம் படம் (image_a2487a.jpg)**

**கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது **என்** எனத் திரியும்.(என்)
2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது **தம்** எனத் திரியும்.(தம்)
3. நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன **முன்னிலைப் பன்மை**ப் பெயர்கள்.(முன்னிலைப் பன்மை)

**பொருத்துக.**

1. தன்மை ஒருமை - **யான்**
2. தன்மைப் பன்மை - **நாம்**
3. முன்னிலை ஒருமை - **நீ**

4. படர்க்கை ஒருமை - **தான்**
5. படர்க்கைப் பன்மை - **தாங்கள்**

**பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுக**

| | | |
|---|---|---|
| கல் - கற்கள் | ஈ - ஈக்கள் | படம் - படங்கள் |
| புல் - புற்கள் | பசு - பசுக்கள் | பக்கம் - பக்கங்கள் |
| சொல் - சொற்கள் | பா - பாக்கள் | வாழ்த்து - வாழ்த்துகள் |
| பல் - பற்கள் | மரம் - மரங்கள் | கடல் - கடல்கள் |
| பூ - பூக்கள் | மாதம் - மாதங்கள் | கை - கைகள் |

## முந்தைய ஆண்டு வினாக்கள்

**1. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது? (SDGS/2022)**

அ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர்.

ஆ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.

இ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தன.

ஈ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தது.

**விடை:** அ) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர்.

**விளக்கம்:** 'மன்னர்' என்பது உயர்திணைப் பலர்பால் பெயராக இங்கு மரியாதைப் பன்மையில் வந்துள்ளதால், அதற்கேற்ப வினைமுற்றும் 'பணிந்தனர்' என்ற பலர்பால் விகுதி பெற்று முடிவதே பிழையற்றதாகும்.

**2. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது? (SDGS/2022)**

அ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

ஆ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர்.

இ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.

ஈ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருப்பவை.

**விடை:** இ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.

**விளக்கம்:** இத்தொடரின் எழுவாய் 'இசை' என்பதாகும். இது அஃறிணை ஒருமைப் பெயர் என்பதால், வினைமுற்றும் 'பெற்றிருந்தது' என அஃறிணை ஒருமையில் முடிவதே சரியானது.

**3. பிழை திருத்துதல்: (ஒரு-ஓர்) (SDGS/2022)**

அ) ஒரு அணில் மரத்தில் ஏறின.

ஆ) ஓர் அணில் மரத்தில் ஏறின.

இ) ஓர் அணில் மரத்தில் ஏறியது.

ஈ) ஒரு அணில் மரத்தில் ஏறியது.

**விடை:** இ) ஓர் அணில் மரத்தில் ஏறியது.

**விளக்கம்:** உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன் 'ஓர்' என்பதும், மெய்யெழுத்தில் (உயிர்மெய்) தொடங்கும் சொற்களுக்கு முன் 'ஒரு' என்பதும் வர வேண்டும். 'அணில்' என்பது உயிரெழுத்தில் தொடங்குவதால் 'ஓர் அணில்' என்பதே சரி. மேலும் 'அணில்' ஒருமை என்பதால் வினைமுற்று 'ஏறியது' என முடிய வேண்டும்.

**4. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க. (HOGS/2023)**

அ) குதிரையில் இருந்து அவர் இறங்கினான்

ஆ) குதிரையில் இருந்து அவர் இறங்கினார்

இ) குதிரையில் இருந்து அவர் இறங்கினார்கள்

ஈ) குதிரையில் இருந்து அவர் இறங்கியது

**விடை:** ஆ) குதிரையில் இருந்து அவர் இறங்கினார்

**விளக்கம்:** 'அவர்' என்பது உயர்திணைப் பலர்பால் (மரியாதை ஒருமை) சொல் ஆகும். எனவே அதற்கு இணையான வினைமுற்று 'இறங்கினார்' என்று முடிவதே இலக்கணப்படி பிழையற்றதாகும்.

**5. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக (HOGS/2023)**

அ) நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன

ஆ) நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தது

இ) நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்கின்றது

ஈ) நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்கிறது

**விடை:** அ) நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன

**விளக்கம்:** 'நெல்மணிகள்' என்பது அஃறிணைப் பன்மைப் பெயர். எனவே, அதன் வினைமுற்று 'உதிர்ந்தன' என்ற அஃறிணைப் பன்மை விகுதியுடன் முடிவதே பொருத்தமானது.

**6. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது? (RAMGS/2023)**

அ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுவாள்

ஆ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறார்கள்

இ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது

ஈ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகின்றன

**விடை:** இ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது

**விளக்கம்:** 'மொழி' என்பது அஃறிணை ஒருமைப் பெயர். எனவே, அதனோடு இயையும் வினைமுற்று 'மாறுகிறது' என்னும் அஃறிணை ஒருமை விகுதி பெற்று வர வேண்டும்.

**7. ஒருமை பன்மை பிழையுள்ள தொடரைக் குறிப்பிடுக. (RAMGS/2023)**

அ) பிரெய்லி நூல்கள் உள்ளன

ஆ) செயற்கை மரம் ஒன்று உள்ளது

இ) ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளது

ஈ) மீன் இதழ்கள் நிறைய உள்ளன

**விடை:** இ) ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளது

**விளக்கம்:** இத்தொடரில் 'நூல்கள்' என்பது பன்மையைக் குறிக்கிறது. பன்மை எழுவாய்க்கு 'உள்ளன' என்றுதான் வரவேண்டும், ஆனால் இங்கு 'உள்ளது' (ஒருமை) என வந்துள்ளதால் இத்தொடர் பிழையுடையது.

**8. பிழை திருத்துக (PCTS/2024)**

அ) அது அன்று

ஆ) அது அல்ல

இ) அது அல்லது

ஈ) அது அள்ளள

**விடை:** அ) அது அன்று

**விளக்கம்:** 'அது' என்பது அஃறிணை ஒருமை. அஃறிணை ஒருமைக்குரிய எதிர்மறை வினைமுற்று 'அன்று' என்பதாகும் ('அவை' என்றால் 'அல்ல' என வரும்). எனவே 'அது அன்று' என்பதே சரியான மரபு.

**9. ஒருமை-பன்மை பிழைகளற்ற சரியானத் தொடரைக் கண்டறிக. (PCTS/2024)**

அ) வீரர்கள் நாட்டைக் காத்தான்.

ஆ) வீரர்கள் நாட்டைக் காத்தது.

இ) வீரர்கள் நாட்டைக் காத்தனர்.

ஈ) வீரர்கள் நாட்டைக் காத்தன.

**விடை:** இ) வீரர்கள் நாட்டைக் காத்தனர்.

**விளக்கம்:** 'வீரர்கள்' என்பது உயர்திணைப் பலர்பால் பெயர். எனவே, வினைமுற்றும் பலர்பால் விகுதி பெற்று 'காத்தனர்' என முடிவதே சரியானது.

**10. பிழை நீக்கி எழுதுக: (AAOGS/2024)**

புத்தகத்தை எடுத்தது அவன் அல்ல.

அ) புத்தகத்தை எடுத்தது அவன் அல்லன்

ஆ) புத்தகத்தை எடுத்தது அவன் இல்லை

இ) புத்தகத்தை எடுத்தது அவன் அன்று

ஈ) புத்தகத்தை எடுத்தது அவன் அல்ல

**விடை:** அ) புத்தகத்தை எடுத்தது அவன் அல்லன்

**விளக்கம்:** உயர்திணை ஆண்பால் ஒருமைப் பெயரான 'அவன்' என்பதற்குரிய எதிர்மறை வினைமுற்று 'அல்லன்' என்பதாகும். (பெண்பாலுக்கு அல்லள், பலர்பாலுக்கு அல்லர் என வரும்).

**11. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது? (AAOGS/2024)**

அ) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.

ஆ) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினான்.

இ) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்கள்.

ஈ) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர்கள்.

**விடை:** அ) "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.

**விளக்கம்:** 'என்பவர்' என்பது உயர்திணைப் பலர்பால் / மரியாதை ஒருமைச் சொல். அதற்கு இணையாக வினைமுற்றும் மரியாதைப் பன்மையில் 'உணர்த்தினார்' என அமைவதே முறையானது.

**12. ஒருமை - பன்மை பிழை நீக்குக. (CASEGS/2024)**

குழந்தைகள் __________ இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

அ) தனது

ஆ) தமது

இ) தன்னால்

ஈ) தம்மால்

**விடை:** ஈ) தம்மால்

**விளக்கம்:** 'குழந்தைகள்' என்பது பன்மைப் பெயர். இத்தொடரில் 'இயன்ற உதவிகளை' என்ற மூன்றாம் வேற்றுமைப் பொருளுக்குப் பன்மை வடிவில் 'தம்மால்' (தான் → தன்னால் என்பது ஒருமை, தாம் → தம்மால் என்பது பன்மை) என வருவதே பொருத்தமானது.

**13. ஒருமை பன்மை பிழை நீக்குக. (MIGS/2023)**

இவை __________ எனக்குப் பிடித்த நூல்கள் வாங்கினேன்.

அ) தான்

ஆ) தாம்

இ) தனது

ஈ) தமது

**விடை:** ஆ) தாம்

**விளக்கம்:** 'இவை' மற்றும் 'நூல்கள்' என்பன பன்மைச் சொற்கள். பன்மைச் சொல்லுக்குப் பின் அழுத்தமாக வரும் தற்சுட்டுப் பெயர் 'தாம்' என்பதாகும் ('தான்' என்பது ஒருமைக்குரியது). எனவே "இவை தாம்…" என்பதே சரி.

**14. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது? (GSTP/2022)**

அ) அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.

ஆ) பசு கன்றை ஈன்றன.

இ) மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

ஈ) குயில் நடனம் ஆடினான்

**விடை:** அ) அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.

**விளக்கம்:** 'அரசர்கள்' என்பது உயர்திணைப் பன்மை (பலர்பால்). அதற்குரிய வினைமுற்று 'செய்தனர்' என்று சரியாக அமைந்துள்ளது. (**மற்றவை:** பசு ஈன்றது, மேகங்கள் சூழ்ந்து கொண்டன, குயில் ஆடியது).

**15. ஒருமை பன்மை பிழையற்றதைக் கண்டறிக (PSGS/2022) (FAGS/2022)**

அ) மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

ஆ) மேகம் சூழ்ந்து கொண்டன.

இ) மேகம் சூழ்ந்து கொண்டது.

ஈ) மேகம் சூழ்ந்து கொள்கின்றன.

**விடை:** இ) மேகம் சூழ்ந்து கொண்டது.

**விளக்கம்:** 'மேகம்' என்பது அஃறிணை ஒருமை. அதற்கேற்ப வினைமுற்றும் 'சூழ்ந்து கொண்டது' என ஒருமையில் முடிவது பிழையற்றதாகும்.